கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை – 2017
மட்டக்களப்பு

-------------------------------------------------------

1 நிதிக்கூற்றுக்கள்

--------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

---------------------------------------

2017 ஆடிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 11 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்*ததோடு* கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 13 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------

மீளாய்வாண்டிற்கு பெறவேண்டிய முத்திரைத் தீர்வை ரூபா 567,800 நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.3.2 பெற வேண்டியவை

-------------------------

இடமாற்றம் பெற்றுச் சென்ற, பதவியை வறிதாக்கிய மற்றும் இளைப்பாறிய ஆறு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடனில் அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 59,416 தொகை 1998 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையாக காணப்பட்ட போதிலும் அவற்றை அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அல்லது ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.3 ஆவணச் சான்றுகள் இன்மை

-------------------------------------

மீளாய்வாண்டில் நிதிக்கூற்றில் காட்டப்பட்ட காணி கட்டடம் பெறுமதியான ரூபா 35,936,292க்கான காணி உரிமைப்பத்திரங்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

---------------------------------------------------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள் மற்றும் விதிகள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | |
| அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை இரண்டு உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பிணைப் பணம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நி.பி.இலக்கம் 571 | 2009 – 2014 காலப்பகுதிகளில் கேள்வி வைப்பு, ஒப்பந்த வைப்பு மற்றும் ஏனைய வைப்புகளாக வைக்கப்பட்ட ரூபா 8,148,122 தொகை நிதிப் பிரமாணங்களில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கொடுத்து தீர்ப்பதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுத்துக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி.இல.1645 மற்றும் 1646 | வாகனங்களுக்குரிய ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் ஒவ்வொரு மாதமும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் மற்றும் மாதாந்த மூலப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி, 2017 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 6,811,723 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 899,694 ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 5,912,029 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

--------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) நீதிமன்றத் தண்டப்பணங்கள்

----------------------------------

2013 ஆம் ஆண்டிற்கு முன்னைய ரூபா 2,082,066 நீதி மன்றத் தண்டப்பண நிலுவை தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாடகை நிலுவை

----------------------

2017 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலத்துக்குரிய வாடகை நிலுவை ரூபா 469,920 தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கவில்லை.

(இ) குத்தகை நிலுவை

----------------------

மீளாய்வாண்டுக்கு முற்பட்ட காலத்துக்குரிய குத்தகை நிலுவை ரூபா 62,166 தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------

3.1 செயலாற்றல் மீளாய்வு

----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

-------------------------------------------

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தாய் சேய் நலன் மற்றும் சௌபாக்கியம் பேணல்

--------------------------------------------------------------

சபையின் எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்தில் 2017 ஆம் ஆண்டில் பிறந்த 467 பிள்ளைகளில் 35(7.5%) பிள்ளைகள் நிறை குறைந்த பிள்ளைகளாக பிறந்திருந்தது. ஆனால் சபையினால் வரவு செலவு திட்டத்தில் ரூபா 200,000 மகப்பேற்று குழந்தை நலனுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும், சபையினால் மேற் குறித்த திட்டத்திற்கு செலவு செய்யப்படவில்லை. மேலும் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே பிறந்த 471, 391 மற்றும் 405 பிள்ளைகள் முறையே 36, 23 மற்றும் 32 நிறைகுறைந்த பிள்ளைகள் பிறந்திருந்தும், சபையினால் வரவு செலவு திட்டத்தில் மேற்படி விடயத்திற்காக நிதி ஏற்படுத்தப்பட்டிருந்தும் 2016 ஆம் ஆண்டு மட்டுமே மேற்படி திட்டத்திற்கு ரூபா 56,000 செலவு செய்யப்பட்டிருந்தது.

(இ) 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் மாடுகள் உணவுக்காக அறுக்கப்படும் போது சட்டத்தின்

ஏற்பாடுகளுக்கு இணங்க மாடுகள் அறுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சட்டரீதியற்ற முறையில் மாடுகள் அறுக்கப்படக்கூடிய வாய்ப்பு உள்ளது.

3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை
-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையிலிருந்து மீளாய்வாண்டின் இறுதிவரை பெறவேண்டிய வீதவரி ரூபா 11,937,904 நிலுவையாகக் காணப்பட்ட போதிலும் அதனை அறவீடு செய்வதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) JCB இயந்திரம் மீளாய்வாண்டில் 222 மணித்தியாலங்கள் சபையின் வேலைகளை செய்ததற்கு மேலதிகமாக ரூபா 2,321,550 வருமானமாக பெற்றுள்ள போதிலும் திருத்தச் செலவிற்காக ரூபா 1,062,484 வும் எரிபொருளுக்காக ரூபா 1,207,369 வும் இயக்குனர், உதவியாளர் சம்பளமாக ரூபா 700,000 வுமாக மொத்தம் ரூபா 3,224,860 செலவு ஏற்பட்டுள்ளது. இவ் இயந்திரம் நவம்பர் 2017 இல் பழுதடைந்துள்ள போதிலும் இதுவரை திருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) Excavator கொள்வனவு
----------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ரூபா 10,950,000 பெறுமதிக்கு ஒரு Excavator 2017 மார்ச் மாதம் கொள்வனவுக்காக செலவு செய்யப்பட்டிருந்த போதிலும், இயந்திரத்தை இயக்குவதற்கான ஆளணி சபையில் காணப்படாத போதிலும், இவ் இயந்திரத்தின் டயர் chain ஆக இருப்பதால் இவ் வாகனத்தினை வேறு ஒரு வாகனத்தின் துணையுடன் தான் நகர்த்த முடியும் என்பதை அறிந்திருந்தும், வரண்ட கால நிலை உள்ள பிரதேசமான இப் பிரதேசத்திற்கு இவ் இயந்திரம் ஒரு பொருத்தமற்றதாக காணப்படுவதோடு மீளாய்வாண்டில் சபையில் உள்ள JCB யின் மூலம் அண்ணளவாக ரூபா 903,310 நட்டம் ஏற்பட்டிருந்தும் அதனைக் கருத்தில் கொள்ளாமல் இவ் இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) ஒவ்வொரு மாதமும் கடனுக்கான வட்டியாக ரூபா 60,000 செலுத்தப்பட்டு கொண்டு வருகின்றதால் 2017 ஏப்ரல் மாதம் தொடக்கம் 2018 மே மாதம் வரைக்குமான 14 மாதங்களுக்காக ரூபா 840,000 கடனுக்கான வட்டி மட்டும் செலுத்தப்பட்டுக் கொண்டு வந்த போதிலும் இவ் குறிப்பிட்ட காலத்துக்காக ரூபா 340,000 மட்டுமே வருமானமாகப் பெறப்பட்டிருந்தது. எனவே இக் குறிப்பிட்ட காலத்தில் மட்டும் ரூபா 500,000 நட்டம் ஏற்பட்டிருந்ததோடு இம் முதலீட்டில் இட்ட தொகையை 11% ஆண்டு வட்டியில் ஒரு வினைத்திறனான முதலீட்டில் இடப்பட்டிருந்தால் இக் குறிப்பிட்ட 14 மாதங்களுக்கும் எந்த விதமான இழப்பும் இன்றி ரூபா 1,405,250 வருமானத்தை சபை உழைத்திருக்கும்.

3.3 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

சபைக்குச் சொந்தமான நான்கு சக்கர உழவு இயந்திரம் ஒன்று 2010 ஆம் ஆண்டிலிருந்து பாவனைக்கு எடுத்துக்கொள்ளப்படாது சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றை திருத்தம் செய்து மீளப்பயன்படுத்தவோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 திண்மக்கழிவு முகாமைத்துவம்

''யுநெப்ஸ்'' நிறுவனத்தினால் திண்மக் கழிவிலிருந்து கூட்டுப் பசளை தயாரிக்கும் நிலையம் 2016 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டிருந்தது. அந் நிலையத்திற்கு கழிவுகளை கொண்டு செல்வதற்காகவும் மற்றும் ஏனைய செலவுமாக ''யுநெப்ஸ்'' நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ரூபா 1,860,000 தொகை மற்றும் சபை நிதிமூலம் ரூபா 17,822,853 தொகையும் செலவு செய்யப்பட்டிருந்தும் கூட்டுப் பசளை தயாரிக்கும் செயற்திட்டம் மீளாய்வாண்டில் முன்னெடுக்கப்பட்டிருக்கவில்லை.

4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 43% தொடக்கம் 113% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5 முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | பேரேடுகள் நாளாந்தம் முறையாக பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) வருமான முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) பாதீடு தயாரித்தல் | பாதீடு தயாரிக்கப்படும் போது உரிய விடயங்கள் பகுப்பாய்வு செய்தல் மற்றும் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும் |
| (ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம் | திண்மக் கழிவகற்றல் தொடர்பாக முறையான திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தல் வேண்டும். |